**பன்னல பிரதேச சபை - 2023**
**---------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பன்னல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172 (1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பன்னல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் முத்திரை கட்டண வருமானம் ரூபா 70,320,914 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2024 இறுதி நிதிக்கூற்றுக்கள் ஊடாக சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு சனவரி மாதத்தில் கிடைத்த நீதிமன்றத் தண்டப்பபணம் ரூபா 2,720,747 தொகை ஆண்டில் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மாகந்துற சிறுவர் பூங்காவின் பாதுகாப்பு வேலி நிர்மாணக் கிரயம் ரூபா 626,595 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வாகனங்கள் கழுவும் இடத்தில் களஞ்சிய அறையை நிர்மாணத்தல் மற்றும் மாகந்துற சிறுவர் பூங்காவில் மணல் பரப்புதல் ஆகிய வேலைகளின் கூட்டு பெறுமதி ரூபா 393,909 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்படடிருந்தது. | 2024 இறுதி நிதிக்கூற்றுக்கள் ஊடாக சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (உ) | 2022 மற்றும் 2021 ஆண்டுகளிற்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்த கணக்காய்வு கட்டணம் ரூபா 393,300 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு 17 கணக்கு விடயங்களிற்குரியதான பேரேட்டு கணக்குகள் மற்றும் அட்டவணைகளில் கூட்டுத் தொகைக்கிடையே ரூபா 9,772,355 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | 2024 இறுதி கணக்குகள தயாரிக்கும் போது சீராக்க நடவடிக்கை எடுப்பதென. | வித்தியாசங்களிற்கான காரணங்களை இனங்கண்டு பரீட்சித்து சீராக்கம் செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 59,622,077 | காலப் பகுப்பாய்வு | 2024 இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அந்த பகுப்பாய்வு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படுவதென. | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | 134 பிரிவு | சபையினால் சேவை வழங்கும் அபிவிருத்தி பிரதேசங்கள் பிரசுரிக்கப்பட்டு வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை . | புதிய வீதவரி வலயத்தினுள் முன்னேற்றமடைந்த கிராம பிரதேசங்கள் இங்காணுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருவதென. | முன்னேற்றமடைந்த கிராம பிரதேசங்கள் இனங்கண்டு வீதவரி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371 | 1988 ஆண்டு முதல் தீர்க்கப்படாத ரூபா 119,374 ஆன முற்பணம் காணப்பட்டது. | மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(2) | காலாவதியான ரூபா 20,032,475 ஆன வைப்புகளை விடுவிக்க அல்லது உரிமை கோராத வைப்புகளை அரச வருமானத்திற்கு செலவு வைக்கவேனும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (இ) | பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி | | | |
| (i) | 59 விதி | கைத்தொழில் பட்டியல் ஒன்று தயாரித்து மார்ச் 31 திகதியளவில் சபையின் செயலாளரிற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதென. | சீர்செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (ii) | 218 விதி | நியமிக்கப்படும் சபை ஒன்றினால் வருடாந்த காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டிய | கணிப்பீட்டு சபை ஒன்றை நியமித்து காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்றை | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான கணிப்பீடொன்றை காலரீதியாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதென. | மேற்கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 27 வாகனங்களில் எரிபொருள் தகன பரிசோதானை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் தகன பரிசோதானை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | உள்ளூராட்சி சுற்றறிக்கை | | | |
| (i) | இலக்கம் 2018/elocal government 01 மற்றும் 2018/ஜுலை 19 கொண்ட சுற்றறிக்கை | இணைத்தினூடாக விண்ணப்பம் சமர்பிக்க மற்றும் கொடுப்பனவு நடவடிக்கைகளை செய்ய பிரஜைகளிற்கு வசதி வழங்கியிருக்கவில்லை. | ஆரம்ப முயற்ச்சி எடுத்துள்ளதுடன் தேவையான எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | இலக்கம் 2010/02 மற்றும் 2010/ஜுலை 30 திகதி கொண்ட சுற்றறிக்கையின் 1.2. ii பிரிவு | விடய மாற்ற முறை மற்றும் அவ்வாறு செய்ய கடினமாக அலுவலர்களிற்காக 02 ஆண்டுகளிற்கு ஒரு முறை பிரிவு மாற்ற முறையொன்றை செயற்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் பணி மாற்றம் செய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (iii) | இலக்கம் 03/2015 மற்றும் 2015/நவம்பர் 02 திகதி கொண்ட சுற்றறிக்கை | வீதி விளக்கு பதிவேட்டை நாளாதுவரையாக பேணிச் சென்றிருக்கவில்லை. | வீதி விளக்கு பதிவேட்டை நாளாதுவரையாக பேண நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 77,462,461 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 96,940,370 ஆகும்.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு மதல் 2020 ஆண்டு வரை சபைக்கு கிடைக்க வேண்டிய சம்பள மீள்நிரப்பு பெறுமதியில் ரூபா 9,922,230 தொகை மேலும் காணப்பட்டது. | எதிர்காலத்தில் தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | மீதிகளை தீர்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2023 ஆண்டு | | | | 2022 ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர்31 இல் மொத்த நிலுவை (பட்டியலிட்ட வருமானத்தில்) |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 15,263 | 12,431 | 10,597 | 1,833 | 15,362 | 13,932 | 14,257 | 2,562 |
| வாடகை | 33,841 | 30,527 | 27,927 | 2,600 | 32,469 | 30,154 | 26,730 | 3,674 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,551 | 1,274 | 1,274 | - | 1,551 | 956 | 996 | - |
| ஏனைய வருமானம் | 26,286 | 17,741 | 20,618 | - | 20,564 | 16,674 | 17,021 | - |
| மொத்தம் | 76,941 | 61,973 | 60,416 | 4,433 | 69,946 | 61,716 | 59,004 | 6,236 |

#### 2.3.2.வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று ரூபா 2,480,960 தொகையான வீதவரி மீதி மற்றும் ரூபா 122,914 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியும் காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும் |
| (ஆ) | குறைந்த விலைமணு பெறுமதி ரூபா 114,987 ஆன 07 சொத்துக்கள் மீளாய்வாண்டினுள் குத்தகை வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டில் இந்த 07 சொத்துக்களையும் டென்டர் கோரிய போதும் குத்தகை பெறப்படவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களிலிருந்து வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி ரூபா 1,197,265 ஆன கடை வாடகை பெறுமதி அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கதென. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் இருந்து மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2023 பெப்ரவரி முதல் திசெம்பர் வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 29,537,748 மற்றும் 2021 ஜுலை மாதம் முதல் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 124,320,914 ஆனது. | பெற வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | இத் தொகையை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2019 சனவரி 20 திகதிய வட மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 2019/02 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் 03 ஆண்டுகளிற்கு ஒரு முறை கடையறைகளை மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், சபைக்கு சொந்தமான குத்தகை வழங்கியிருந்த 136 கடையறைகளை மதிப்பீடு செய்து கடை வாடகை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் ஒப்படைக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின்ன் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 முக்கிய விடயங்களை நிறைவேற்ற துணைச் சட்டம் விதிக்க வேண்டியிருந்த போதும் 2023 திசெம்பர் 31 திகதி வரை 20 விடயங்களிற்காக துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமானம் உழைக்க முடியுமான சந்தர்ப்பங்களை இனங்கண்டு துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக மூலதன செலவினம் ரூபா 591,000 மற்றும் மீண்டுவரும் செலவினம் ரூபா 27,404,068 செலவிட்டிருந்த போதும் கழிவுகள் விற்பனையால் கிடைத்த வருமானம் ருபா 908,275 ஆனது. | இயற்கை பசளைகளிற்கு பாரிய கேள்வி இருந்த போதும் தற்போது அந்த கேள்வி குறைவடைந்ததன் மீது இந்வாறாக வரமானம் குறைந்துள்ளதென. | கழிவுகளை முறையாக முகாமைத்துவம் செய்து வருமானத்தை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி பெறவேண்டிய 06 கணக்குகளின் பெறுமதி ரூபா 255,002,969 ஆனது. | பெறவேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | அறவிட வேண்டிய தொகையை அறவிட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி செலுத்த வேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 265,725,299 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதென. | செலுத்த வேண்டிய தொகையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதி இடம் மாறிச் சென்ற 12 ஊழியர்களிடமிருந்து ரூபா 583,310 ஆன ஊழியர் கடன் மீதியொன்று அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென. | ஊழியர் கடன் மீதிகளை அறவிட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 8,632,166 பெறுமதியான 02 கட்டிடங்கள் மாகந்துற உப அலுவலக நிலையான சொத்து பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பதிவேடுகளில் குறிப்பிடுவதென. | சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள், இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்று வாகனங்களிற்கான நிலையான சொத்துப் பதிவேடு நாளாதுவரையாக்கி பேணிச் சென்றிருக்கவில்லை. | இணங்குவதென. | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளாதுவரையாக பேணிக் கொள்ள வேண்டும். |
| (இ) | சபையினால் பராமரிக்கப்படும் 50 மயானங்களை சுவீகரிக்க தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | மயானங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகார ஆளணியினரி 176 ஆனதுடன் 49 வெற்றிடங்கள் ஆனது. | வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதென. | ஆளணியினர் தேவைப்பாட்டை கால ரீதியாக மீளாய்வு செய்து கொள்ள வேண்டும். |

### 3.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் பயன்படுத்தப்படும் பெறுமதி ரூபா 7,500,000 ஆன JCB இயந்திரம், டபல் கெப் வண்டி மற்றும் ஜீப் வண்டியின் உரிமையை பிரதேச சபையின் பெயரில் பதிவு செய்திருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதென. | சபையின் பெயரில் பதிவினை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | பெறுமதி ரூபா 1,500,000 ஆன ஸ்கவேட்டர் வண்டி மற்றும் பெறுமதி ரூபா 5,000,000 ஆன நிசான் வகையான தீயணைப்பு வண்டி விளைவற்று காணப்பட்டன. | கணக்காய்வுடன் இணங்குவதென. | சபைக்கு சொந்தமான வாகனங்கள் துரிப்பிடிக்க விடாது திருத்தி பயன்படுத்த அல்லது அவ்வாறு முடியாத வானங்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாலுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ள வேண்டிய பணிகள் உள்ளிட்ட செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்திருந்த போதும், அங்கு இனங்காணப்பட்ட 45 விசேட செயற்பாடுகளில் 06 இனது முன்னேற்றம் 30 – 75 சதவீதத்திற்கு இடையிலான நிலையில் காணப்பட்டது. | 2024 ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டதிற்கு அமைய நடவடிக்கை எடுப்பதென. | செயல் நடவடிக்கை திட்டதிற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருமான விடயங்கள் 05 இல் மதிப்பிட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களிற்கு இடையே 13 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டதுடன் 08 செலவின விடயங்களில் மதிப்பிட்ட மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே 30 சதவீதத்திற்கும் 81 இற்குமிடையிலான விலகல் காணப்பட்டது | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுப்பதென. | நடைமுறை சாத்தியமாக மதிப்பீட்டை தயாரிக்க வேண்டும் |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக் நோக்கங்கள் 14 இன் கீழ் இனங்கண்டிருந்த வெற்றிக் சுட்டிகள் 55 இற்கிடையே 21 சுட்டிகளை மீளாய்வாண்டு இறுதி திகதி வரை வெற்றியடையும் முன்னேற்றம் 75 சதவீதத்திலும் குறைவாக இருந்தது. | இனங்கண்ட நிலைபேறான இலக்குகளிற்குரியதாக வேலைத் திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | இனங்கண்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |